பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

07 02 2025 — 6 45
வெள்ளிக்கிழமை — காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டில் அவசர நிலையை பிரகடனப்படுத்தியதன் மூலம் அரசியல் சாசனத்தின் ஆன்மாவை காங்கிரஸ் அழித்துவிட்டதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

2. பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ள திரு. **Pete Hegseth**-ஐ நேற்று தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார்.

3. திருநெல்வேலி மாவட்டத்தில் இன்று ஆயிரத்து 131 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டப் பணிகளை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்.

4. அரசு மருத்துவமனைகளில் செயல்பட்டு வரும் டயாலிசிஸ் சிகிச்சை மையங்கள் தனியார்வசம் ஒப்படைக்கப்படமாட்டாது என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

5. இங்கிலாந்துக்கு எதிரான முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

நாட்டில் அவசர நிலையை பிரகடனப்படுத்தியதன் மூலம் அரசியல் சாசனத்தின் ஆன்மாவை காங்கிரஸ் அழித்துவிட்டதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் குடியரசுத்தலைவர் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதிலளித்து நேற்று மாநிலங்களவையில் பேசிய அவர், அதிகாரத்தில் தொடர வேண்டும் என்பதற்காக அவசர காலத்தின்போது அரசியல் சாசனம் முடக்கப்பட்டதாக கூறினார்.

அவசர காலத்தின்போது அரசு எடுத்த நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவிக்குமாறு அப்போது தேசிய அளவில் புகழ்பெற்ற திரைக்கலைஞர் தேவ் ஆனந்த் கட்டாயப்படுத்தப்பட்டதாகவும், அதற்கு அவர் மறுப்பு தெரிவித்ததால் ஆகாஷ்வாணியில் அவரது திரைப்படங்கள் அனைத்தும் ஒலிபரப்பாமல் நிறுத்தி வைக்கப்பட்டதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

ஆனால் இப்போது அரசியல் சாசனத்தின் புனிதம் பற்றி காங்கிரஸ் பேசி வருவதாகவும் அவர் கூறினார்.

அனைவருடைய வளர்ச்சிக்காக நாம் அனைவரும் இணைந்து செயல்படுவோம் என்பதுதான் மத்திய அரசின் குறிக்கோள் என்றும், அதற்காகத்தான் மேலும் 5 ஆண்டுகள் பணியாற்ற நாட்டு மக்கள் தமக்கு வாய்ப்பு வழங்கியுள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

தேசத்திற்கே முன்னுரிமை என்பதுதான் நமது வளர்ச்சிக்கான மாதிரி என்றும், மத்திய அரசு இதர பிற்படுத்தப்பட்ட மக்கள், பெண்கள், மூன்றாம் பாலினத்தவர் உட்பட பல்வேறு தரப்பினரின் மேம்பாட்டுக்காக பணியாற்றி வருவதாகவும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

<<<<>>>>

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ள திரு. **Pete Hegseth**-ஐ நேற்று தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார்.

ராணுவம், விமானப்படை, கடற்படை மற்றும் விண்வெளி தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் இரு நாடுகளுக்கு இடையிலான விரிவான ஒத்துழைப்பு குறித்தும், பாதுகாப்புத் துறையில் இரு நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்துவது குறித்தும் இருவரும் ஆலோசித்தனர்.

தொழில்நுட்பம், பாதுகாப்பு தளவாடத்துறைக்கு தேவையான பொருட்களை உற்பத்தி செய்தல், சரக்குப் போக்குவரத்து, கூட்டு ராணுவ ஒத்திகை ஆகியவற்றில் இரு நாடுகளும் இணைந்து செயல்பட இந்த பேச்சுவார்த்தையின்போது ஒப்புக்கொள்ளப்பட்டது.

பாதுகாப்புத்துறையில் வளர்ந்து வரும் புதுமையான கண்டுபிடிப்புகளில் கூட்டாக செயல்படவும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

பாதுகாப்புத்துறை ஒத்துழைப்பு தொடர்பாக விரிவான நடைமுறைகளை மேற்கொள்ளவும் இருதரப்பிலும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

<<<<>>>>

திருநெல்வேலி மாவட்டத்தில் ஆயிரத்து 61 கோடி ரூபாய் மதிப்பிலான தாமிரபரணி – கருமேனியாறு – நம்பியாறு உபரி நதிநீர் கால்வாய் திட்டத்தை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்.

திருநெல்வேலியில் நடைபெறும் அரசு நிகழ்ச்சியில் 180 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுத்தமல்லி முதல் கொங்கந்தான்பாறைவிளக்கு வரை அமைக்கப்பட உள்ள திருநெல்வேலி மேற்கு புறவழிச் சாலை திட்டத்திற்கும் அவர் அடிக்கல் நாட்ட உள்ளார்.

மேலும் 309 கோடி ரூபாய் மதிப்பிலான 20 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்ட உள்ள முதலமைச்சர், ஆயிரத்து 131 கோடி ரூபாய் செலவில் முடிவுற்ற 24 திட்டப் பணிகளையும் தொடங்கி வைக்கிறார்.

167 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 75 ஆயிரத்து 151 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளையும் அவர் வழங்க உள்ளார்.

<<<<>>>>

வன உரிமைச் சட்டம் 2006-ஐ நடைமுறைப்படுத்துவது குறித்து மாவட்ட வன அலுவலர்கள் மாவட்ட ஷெட்யூல்டு வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

இச்சட்டத்தின்படி பழங்குடியினர் குடியிருக்கும் வன நிலங்களுக்கு புவியியல் தரவின் அடிப்படையில் தனிநபர் உரிமைகள் மற்றும் சமூக உரிமைகள் மாவட்ட ஆட்சியரால் வழங்கப்படுகின்றன.

இந்த சட்டத்தை செம்மையாக நடைமுறைப்படுத்தும் வகையில் மாநில மற்றும் மாவட்ட அளவிலான திறன் வளர்ப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டதாகவும் மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>

அரசு மருத்துவமனைகளில் செயல்பட்டு வரும் டயாலிசிஸ் சிகிச்சை மையங்கள் தனியார்வசம் ஒப்படைக்கப்படமாட்டாது என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

அரசே தொடர்ந்து இந்த மையங்களை செயல்படுத்தும் என்று தேசிய நல்வாழ்வு குழும இயக்குநர் திரு. அருண் தம்புராஜ் கூறியுள்ளார்.

சிறுநீரக பாதிப்பு உள்ளானவர்களுக்கு ரத்த சுத்திகரிப்புக்கான டயாலிசிஸ் சிகிச்சை பெரும்பாலான அரசு மருத்துவமனைகளில் வழங்கப்பட்டு வருகிறது.

அதற்கான தொழில்நுட்பம் மற்றும் பணியாளர்கள் போதிய அளவில் உள்ளதால் அரசே தொடர்ந்து இந்த சிகிச்சை மையத்தை செயல்படுத்தும் என்று திரு. அருண் தம்புராஜ் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மத்திய பட்ஜெட்டில் உயிர்காக்கும் பல்வேறு மருந்துகளுக்கு அளிக்கப்பட்டுள்ள வரிச் சலுகைக்கு பொதுமக்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே மக்கள் மருந்தகங்களால் பயனடைந்து வரும் தங்களுக்கு இது கூடுதல் சலுகையாக கிடைத்துள்ளதாக வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளி ஒருவர் கூறினார்.

<<<<>>>>

கன்னியாகுமரியில் நபார்டு வங்கி மற்றும் மாநில அரசின் சார்பில் உள்ளூர் கைவினைக் கலைஞர்களின் உற்பத்திப் பொருட்கள் அடங்கிய விற்பனைக் கண்காட்சி இன்று நடைபெற உள்ளது.

நெய்தல் திருவிழாவின் ஒரு பகுதியாக நடைபெற உள்ள இந்தக் கண்காட்சியில், புவிசார் குறியீடு வழங்கப்பட்ட பொருட்கள் காட்சிப்படுத்தப்படும் என்று நபார்டு வங்கியின் முதன்மை பொதுமேலாளர் திரு. ஆனந்த் கூறினார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஷார்ஜாவில் 80 நாடுகளின் சாரண – சாரணியர் இயக்கங்கள் பங்கேற்கும் 10வது சர்வதேச சாரணியர் சந்திப்பு நிகழ்ச்சி நாளை தொடங்க உள்ளது.

-----------

இந்தியா வந்துள்ள ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு பொதுச் செயலாளர் திரு. **Nurlan Yermekbayeb,** மத்திய வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. கீர்த்திவர்த்தன் சிங்கை சந்தித்துப் பேசினார்.

-----------

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் உள்ள ஷேக் முஜிபுர் ரஹ்மானின் அதிகாரபூர்வ இல்லத்தில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

-----------

உத்தரப்பிரதேச மாநிலம் **Bahraich-**ல் சிறுத்தை தாக்கியதில் 5 பேர் காயமடைந்தனர்.

-----------

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசு திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சியர் திரு. பிரதாப் நேற்று நேரில் ஆய்வு செய்தார்.

-----------

தமிழக அரசின் திட்டங்கள் குறித்து செய்தி மக்கள் தொடர்புத்துறை தங்களது சமூக வலைதளப் பக்கங்களில் பல்வேறு போட்டிகளை நடத்த உள்ளது.

-----------

விருதுநகர் மாவட்டத்தில் கோல்வார்பட்டி, முத்துராமலிங்கபுரம் உள்ளிட்ட ஊராட்சிகளில் ஒரு கோடியே 37 லட்சம் ரூபாய் மதிப்பிலான புதிய திட்டப் பணிகளுக்கு வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் நேற்று அடிக்கல் நாட்டினார்.

-----------

சென்னை கிண்டியில் உள்ள சிறுவர் பூங்காவில் யானைத் திருவிழா இன்று தொடங்குகிறது.

-----------

*விளையாட்டுச் செய்திகள்*

இங்கிலாந்துக்கு எதிரான முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நாக்பூரில் நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த இங்கிலாந்து 47 புள்ளி 4 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 248 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

249 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்தியா 38 புள்ளி 4 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 251 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

அதிகபட்சமாக சுப்மன் கில் 87 ரன் எடுத்தார். ஷ்ரேயாஸ் அய்யர் 59 ரன்னும், அக்ஷர் பட்டேல் 52 ரன்னும் எடுத்து அணியின் வெற்றிக்கு உதவினர்.

-------------

ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் கோவா அணி 2-1 என்ற கோல் கணக்கில் ஒடிசா அணியை வென்றது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி — மும்பை அணியை எதிர்கொள்கிறது.

------------

ஆசிய குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் சீனாவின் அர்பின் நகரில் இன்று தொடங்குகிறது.

இம்மாதம் 14ஆம் தேதி வரை 8 நாட்கள் நடைபெறும் இந்தப் போட்டியில் 59 தடகள வீரர்கள் உட்பட 88 பேர் கொண்ட இந்திய அணி பங்கேற்கிறது.

முதல் முறையாக இந்தப் போட்டிக்கு தேசிய விளையாட்டு கூட்டமைப்பு திட்டத்தின்கீழ் அரசே நிதியுதவி வழங்கியுள்ளது.

-----------

மும்பை சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Prarthana Thombare –** நெதர்லாந்தின் **Arienne Hartono** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-1, 6-3 என்ற செட் கணக்கில் ஜார்ஜியாவின் **Oksana -** ஜப்பானின் **Hibino** இணையை வென்றது.

**<<<<The End>>>>**